# கொழுந்து

**18**

ஜனவரி - பெப்ரவரி - 2005

விலை 5 ரூபாய்


## விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை வலியுறுத்துகிறார் சுழல் பந்து வீச்சாளர் முரளி

- ஜோ அரியரத்தனம்

கிளிநொச்சி, இலங்கை, நவம்பர் 2 (ராய்டர்)

இரு தசாப்தகால உள்நாட்டுப் போருக்குப்பின், நீடித்த சமாதானத்தைக் கொணர்வதற்கு, நின்று போன பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு அரசையும், தமிழீழ விடுதலைப்புதிகளைப் செவ்வாயன்று வற்புறுத்தினார் இலங்கையின் அதிசிறந்த பந்து வீச்சாளர்களுள் ஒருவரான முத்தையா முரளித்ரன்.



ஐக்கிய நாடுகளில் உலக உணவுத் திட்டப் பிரதிநிதிகளோடும், அந்நிய நிதியுதவியாளர்களோடும் மூன்று நாள் பயணமொன்றை மேற்கொண்டு வடக்கு சென்றிருந்தபோதே முத்தையா முரளிதரன் இவ்வேண்டுகோளை விடுத்தார்.

அவரது இவ்விஜயம் தமிழ்ப்புலிகளின் அரசியல், நிர்வாகத்துக்குட்பட்ட பகுதிகளையும் உள்ளடக்கியிருந்தது. இக்கொடிய யுத்தம் 64,000 பேர்களைப் பலிவாங்கியதுடன், வடக்கிலும் கிழக்கிலும் பல பகுதிகளை பேரழிவுக்குள்ளாக்கியது. "ஓர் விளையாட்டு வீரனென்ற முறையில் என்னால் சொல்ல முடிந்த்தெல்லாம் இதுதான் அருகருகே கிரிக்கட் விளையாட சிங்களவரும் தமிழரும் முஸ்லிம்களும் ஒன்று சேர்கிறார்கள்" என, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு உதவித் தலைவர் சுதா மாஸ்டருடன் நடத்திய ஒரு மணித்தியாள பேச்சுவார்த்தைக்குப்பின் முரளிதரன் கூறினார்.

"அதே போன்று, இந்நாட்டு மக்களின் நலன் கருதி அரசியல்வாதிகளும் எல்ரீரீயினரும் ஒன்று சேர்ந்து சமாதானத்தை உண்டுபண்ண வேண்டும்" என யுத்தத்தால் உண்டான அழிவுகளைப் பார்த்து விட்டு அவர் ராய்டநிடம் கூறினார். "சமாதான மேசைக்குவர எல்ரீரீ தயாராகவுள்ளது. அரசின் நிலைப்பாடு குறித்து எனக்குத் தெரியாவிடினும், தெற்கில் உள்ள மக்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர். அரசு அவர்களது அபிலாஷைகளை நிறைவேற்றிவைக்க வேண்டும்; பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும்."

கிரிக்கட் இலங்கையில் சிங்களவராலும் தமிழராலும் மிக உற்சாகமாக ஆடப்படும் வெகு பிரசித்தமான விளையாட்டு

ஆகஸ்ட்டில் தோள் அறுவைச் சிகிச்சைக்குப் பின் கிடைத்த ஓய்வைப் பயன்படுத்தி இலங்கையின் கிராமப்புறங்களில், வசரி குறைந்த சமூகங்களின் மத்தியில் மனித நலப் பணிகளில் கவனஞ் செலுத்தி வருகிறார் முரளிதரன்.

இந்த 32 வயது இளைஞரை, போரினால் பாதிப்புற்ற ஆயிரக்கணக்கான மக்களுக்கு உதவி வழங்கிவரும் ஐக்கிய நாடுகளில் உலக உணவுத்திட்ட அமைப்பு, "வறுமைக் கெதிரான போராட்டத்தில் பங்காளி" யாக வடக்கின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய நகரங்களுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தது.

முரளிதரன், தன் சொந்த அறக்கட்டளையான குணசேகரா - முரளீதரன் ∴ பவுண்டேசனுக்கு நிதிதிரட்டும் உலகப் பயணத்தை முடித்துக் கொண்டு அண்மையில் தான் நாடு திரும்பியிருந்தார். இவரது ∴ பவுண்டேசன் தெற்கில் சுமார் 60 சமூகநலத்திட்டங்களை மேற்கொண்டுள்ளது.


அற்புதமாக வளைந்து கொடுக்கும் மணிக்கட்டுடனும், பூட்டுண்ட முழங்கையுடனும் சர்ச்சைக்குரிய சுழல் பந்து வீச்சாளராகக் கருதப்படும் முரளிதரன் சென்ற மே மாதம், கோர்ட்னி வொல்ஷின் 519 விக்கட் சாதனையை முறியடித்திருந்தார். எனினும் அவர் காயமடைந்த பின் அவரது சாதனையை அவுஸ்திரேலியாவின் ஷேன் வார்ன் தாண்டிச் சென்றுள்ளார்.


## எமக்கு யுத்தம் ஒன்று தேவையில்லை சமாதானத்துக்கு குரல் கொடுப்போம்

- கலைக்கழகத் தலைவர் சாள்ஸ் தயானந்த -

இலங்கையில் நிலையான சமாதானம் ஒன்று நிலவவேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம். யாழ். நூல்நிலையம் எரிக்கப்பட்டமை மிகவும் கீழ்த்தரமான - கொடூரமான செயல். இதற்கு மனம் வருந்துகின்றேன் என இலங்கை கலைக்குழுத் தலைவர் சாள்ஸ் தயானந்த தெரிவித்தார்.

கலைஞர்கள் என்போர் மதம், மொழி என்பவற்றுக்கு அப்பாற்பட்டவர்கள். எனவே, கடந்தகால வரலாற்றை மறந்து ஒற்றுமையாக நாம் வாழ வேண்டும். மொழியின் பிரிவை நாம் மறக்கின்றபோது மனிதர்கள் என்ற ரீதியில் ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள்.





முதலாவது படத்தில் யாழ் நூலகமும் இரண்டாவது படத்தில் கலைக்கழக தலைவர் யாழ் மாநகர ஆணையாளர் கலாநிதி குணராசாவிடம் நூல்களை வழங்குகிறார் அருகில் கொழுந்து ஆசிரியரும் காணப்படுகிறார்.

அமைச்சர்கள், சீன அரசாங்கம், எழுத்தாளர்கள், புத்தக வெளியீட்டாளர்கள், பாடசாலைகள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரிடமிருந்து சேகரித்த பொருட்களை - இலங்கை கலைக்கழகம் அன்களிப்புச் செய்யும் வைபவம் நேற்று யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்ததாவது

எமக்கு யுத்தமொன்று அவசியமில்லை. ஒருமித்து சமாதானத்துக்காக குரல் கொடுக்கும்போது வடக்கிலும் தெற்கிலுமுள்ள இலக்கிய வாதிகளை ஒன்றுதிரட்டி பெரிய மகாநாடு ஒன்றை நடத்த வேண்டும். அல்லது கலைத்திறன் விழா ஒன்றை நடத்தவேண்டும். ஐக்கியத்தை நிலைப் படுத்தி சமாதானத்தை முன்னெடுப்போமென அவர் மேலும் தெரிவித்தார்.

# பழம் பெரும் பத்திரிகையாளர்

## டி.எம். முருகையா



இலங்கையில் சுமார் நாற்பதாண்டுகளாக, பத்திரிகை உலகில் தொடர்ந்து பணியாற்றியவர் எம். முருகையா ஆவார்.

கல்வி, கற்றல், பாடசாலை விளையாட்டு, என்று தமிழகத்தில் அகரம் அமைத்தவர் இப்பெருமகன் ஈழத்து தலத்தோயர் கணேஷ் என்பவரின் நண்பரான மதுரை மாயாண்டி பாரதியின் மாணாக்கனாக பாடம் பயின்றவர். இப்படி இவர்கள் இருவரும் எழுத்துத் துறையில் தொடர்ந்து ஈடுபட்டவர்கள்,

இருவரும் இலங்கையின் பத்திரிகைத் துறையோடு நீண்ட காலம் தொடர்பு கொண்டவர்கள்.

இலங்கைப் பத்திரிகையோடு டி.எம். முருகையா தொடர்பு வைத்துக் கொண்டே, தமிழகத்திற்கு ஓடி அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பாடம் பயின்றவர். வெளிவாரி மாணவனாக விளங்கியவர்.

இலங்கையின் பழம் பத்திரிகை வீரகேசரியில் ஆசிரியர் குழுவில் ஆரம்பத்தில் தொண்டாற்றியவர். எப்போதும், மிகவும் அமைதியாகத் தனது கடமையை நிறைவேற்றிய படியே இருப்பவர் இப்பெருமகன். இவரின் அலுவலகத்திற்குச் சென்று பார்ப்பின் "தானுண்டு தன் பணியுண்டு" என்று மிகவும் நிதானமாக, கடமையிலே கண்ணாக இருப்பார் டி.எம். முருகையா

பதுளையில் மணம் முடித்து, ஐந்து பிள்ளைகளின் தந்தை என்ற பெருமைக்குரியவர். இவரது மக்கட் செல்வங்களில் டொக்டராகவும்,சுங்கத்திணைக்கள உத்தியோகஸ்தராகவும் அதிபராகவும் பணிபுரிபவர்களும் உள்ளார். தினபதி, சிந்தாமணி, ஈழநாடு, ஈழமணி, என்று எல்லாத் தமிழ் பத்திரிகைகளிலும், முப்பத்தொரு ஆண்டுகளுக்கு மேலாகப் ஈழத்துப் பத்திரிகை உலகில் பணியாற்றிய பெருமைக்குச் சொந்தக்காரர் நமது டி.எம். முருகையா தமிழகத்திற்கு விடுமுறையில் ஓடி ஓடி, தனது பணிக்கான அநுபவங்களை திரட்டி, மிகவும் தனது ஆற்றலை மெருகுபடுத்திக் கொண்ட மேதை இவர்.

வீரகேசரி ஆசிரியராக இருந்த ஹரன், கேவி வாஸ், "ஈழநாடு" தினபதி - சிந்தாமணி, - இராஜ - அரியரத்தினம், செய்தி நிருவாக ஆசிரியர் ரா.மு. நாலிங்கம் இப்படி பல பெரு மக்களோடு பணி செய்தவர், - "உலக வலம்," உலக நோக்கு" என்று உலக சஞ்சாரம் செய்த - திறமை மிக்க பத்திரிகையாளர்.

"வீரகேசரி" - யில் தனது பணியைத் தொடங்கி, பணியிலிருந்து ஓய்வு பெறும் போதும் மீண்டும் "வீரகேசரி"யிலேயே அவர் தொண்டாற்றினர்.

பதுளையில் அதிபராக உள்ள மகன் சித்தார்த்தனின் அரவணைப்பில், தனது கடைசி காலத்தில் வாழ்ந்து வரும் இப்பெருமகனுக்கு, கிட்ட வேண்டிய பெருமையும், கீர்த்தியும் ஏனோ பத்திரிகை ஆசிரியர்களால் முடக்கப்பட்டது. கண்டும் காணாமலே புறந்தள்ளப்பட்டது கவலைக்குரியது. இதையிட்டு இன்னும் கட்டுக்குழையால் காட்சி தரும் டி.எம். முருகையாவின் மனக்கவலையை, எப்படியோ துணிந்து தேடிப்பிடித்து இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம், விழாவாக நடத்தி, அவரது நெடுங்காலத் தொண்டை நெஞ்சாரப் பாராட்டியது." தங்கப் பதக்கம்" அணிவித்து பாராட்டியது வாழ்த்துக்குரிய வரவேற்கத்தக்கச் செயலாகும்.

எத்தனையோ உலக நாடுகளுக்கு பத்திரிகையாளர்கள் சென்று வரும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்கள் பத்திரிகை ஆசிரியர்கள். ஆனால், தனக்கு ஒதுக்கிய மேசையிலும், நாற்காலியிலும் அமர்ந்தவராய், உலக வலம் வந்தவரை, ஏறெடுத்துப் பார்க்காமல் இருந்தது வியப்புக்குரிய விந்தையான செயலாகும்.

-தமிழோவியன்-

இவருடன் சற்று உரையாடினால், கிடைக்கும் அநுபவங்கள் அத்தனையும், அருமையான சுவைக் களஞ்சியமாகும்.


பதுளை பொது நூலகத்தில் நாள் தோறும் பெரும் பொழுதை கழிக்கும் டி.எம். முருகையா, இன்று வரை படித்து சேகரிப்பது என்னவோ?

பத்திரிகைகளில் பணி செய்வர்களுக்கு இவர் சொல்லும் புத்திமதி, இதுதான்.

"உங்களது கடமையை - பொறுப்பை முறையாகச் செய்யுங்கள் தனக்கு மேல் உள்ளவரிடம், ஓடிப்போய், தன்னோடு வேலை செய்பவர்களைப் பற்றி கோள் சொல்லாதீர்கள் பந்தம் பிடித்து பகற்றுரோகம் செய்யாதீர்கள்.

# கலைஞானி முத்தையா மாஸ்டர்

பாடசாலையில் படிக்கும் நாட்களில் பன்னிரண்டு வயதில் நாடகங்களில் நடித்த



முத்தையா மாஸ்டர், இன்று நம் மத்தியில் மூத்த கலைஞராக உலா வருகிறார். இவரின் தந்தையார் தாய் மாமன் நாடகக்கலைஞராக இருந்த காரணத்தால் இவருக்கு இளம் வயதிலேயே நடிக்க வேண்டும் என ஆர்வம் ஏற்பட்டது.

ஐம்பதுகளில் ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் பாடசாலை மாணவர்களுக்கு நாடக பயிற்சி அளித்து பாடசாலை கலை விழாக்கள், தமிழ் மொழி தின விழாக்களில் பங்கு பற்றச் செய்தார்.

1962-ல் தோட்டத்து இளைஞர்களின் நாடக ஆர்வத்திற்காக "அருள் நந்தி நாடக மன்றம்" என்ற அமைப்பை நிறுவி பொங்கல், தீபாவளி போன்ற உற்சவ நாட்களில் தோட்டத்து இளைஞர்களை வைத்து நாடகங்களை அரங்கேற்றினார்.

இலங்கையில் பி.எஸ். கிருஷ்ணகுமார் டைரக்ஷனில் உருவான "தோட்டக்காரி" மீனவப் பெண், ஆகிய திரைப்படங்களிலும் முத்தையா மாஸ்டர் நடித்துள்ளார். "மலையோரம் வீசும் காற்று" என்ற தொலைக்காட்சி நாடகத்திலும் நடித்துள்ளார்.

1996-ல் மத்திய மாகாண சாகித்திய விழாவில் "கலைஞானி" என விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். மூத்த கலைஞரான முத்தையா மாஸ்டர் கலைத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு நாடக பயிற்சி அளித்து வருகிறார்.

Manufacturers, Wholesalers and retailers of quality Bags & Purses

JANALANKA
ENTERPRISE
No. 60, Kotugodella Veediya.
Kandy

Stationers & Fancy Goods

# எமது மண்ணின் நிலங்களை கடல் விழுங்குகிறது

கொபி அவூனர் (கானா நாட்டு கவிஞர்)

எமது மண்ணிலே
நகரினுள்
கடல் புகுந்து விட்டது
குசினிகளுள்
புகுந்து புறப்படுகிறது
அடுக்களையிலிருந்து

வாரிச் செல்லும் விறகுகளை
இரவுகளில் திருப்பி அனுப்புகிறது

எமது மண்ணின் நிலங்களை
கடல் விழுங்கிக் கொண்டிருக்கிறது

ஒரு நாளின்
நடுச் சாமத்திலே
அது
சீமெந்துச் சுவர்களையும்
அழித்தபடி வந்தது
கோழிகள் பானைகள் அகப்பைகள்
அனைத்தையும் வாரியே சென்றது

எமது மண்ணின் நிலங்களை
கடல் விழுங்கிக் கொண்டிருக்கிறது.

பெண்களின் ஓலங்களும்
அழும் ஓசைகளும்
கேட்கச் சகிக்கவில்லை.
உக்கிரக் கடலிடமிருந்து
தங்களைக் காக்கும்படி
கும்பிடும் கடவுளையெல்லாம்
பெயர் கூவி அழைக்கிறார்கள்.

தன் பானை இருந்த
இடத்தின் அருகே
அக்கூ நிற்கிறாள்
அவள்
பிள்ளைகள் இரண்டும்
அருகில்...
குளிரில் நடுங்கியபடி...
கைகள்
மார்புகளை மூடியிருக்க
சோகமாய் அழுகிறாள்
அவள் மூதாதையர்
அவளைக் கவனிக்கவில்லை
அவளின் கடவுள்கள்
அவளைக் கைநெகிழ்ந்து விட்டனர்

குளிரான
அந்த ஞாயிறு காலையிலே
புயல் அடித்துக் கொண்டிருந்தது
ஆடுகளும் கோழிகளும்
குரூரமான கடலின் நீரிலே
போராடிக் கொண்டிருந்தன
விம்மல்களுக்கும்
நெஞ்சின் ஆழத்திலிருந்து
எழும் அனுங்கல்களுக்கும்
மேலாக
கடல் நீர்
கரையில் மோதும் ஓசை
கேட்டபடியிருந்தது.
ஓயாத அதன் பேரிரைச்சல்
கேட்டுக் கொண்டேயிருந்தது.
அவர் உடமைகளையெல்லாம்
அது வாரிப்போய் விட்டது
தாயகத்தின் நிலங்களை
விழுங்கிக் கொண்டிருக்கும்...
முழுதாக விழுங்கிக் கொண்டிருக்கும்
கடலிலே
சீதனமாய் வந்த
தன் நகைகளையெல்லாம்
அதீனா இழந்து போனாள்.

களத்திலேயே வீழ்வோம்
என்ற கவிதைத் தொகுதியில்
"The sea eate the land at home
kofi awoonor"

தமிழ் வடிவம் - வி.பி. ஜோசப்
(குழல்)

# கட்டப்பட்ட கல்லறைகள்

பிணந்தின்னி
கழுகுகளின்
இரை களத்தில்
தினந்தோறும்
மரத்த இதயங்களின்
மரண ஊர்வலங்கள்.

கறுப்பு காட்டி
மறுப்பு சொன்ன
காலங்கள்
மெல்லென
நகர்ந்து...

வெண்மை...
வந்து
மையலுடன்
சல்லாபிக்கும்
போதும் கூட....

அங்கிகாரம்
பெற்றிடாத
தாங்கியில்லா
பத்திரமாய்
சுழலில் இன்னும்.

மரத்த இதயங்கள்
மரிக்குமுன்
தனக்கான
கல்லறையை
கட்டும் நாட்களாய்"
நாட்கள்
நகர்கின்றன...

ஜெ. பாலறஞ்ஜனி,
ஹட்டன்.

இலக்கிய மனம் பரப்பும் கொழுந்து
இகமே புகழ இனிதே வளர்க!



CENTRAL ESSENSE SUPPLIERS

Deales in all Kinds of liquid essences,
Food Colours and Scents Etc.
76/B, King Street, Kandy

Tel: 081 -2224187, 081-4471563

# புகலிடத்து இலக்கியம் (3)

இலண்டனிலிருந்து...
என். செல்வராஜா (நூலகவியலாளர்)

ஜேர்மனியில் ஒஸ்னபுருக் Osnanruck பகுதியில் நீண்டகாலமாக வாழும் மட்டுவில் ஞானகுமாரன் ஏற்கெனவே "முகமறியா வீரர்களுக்காக" என்ற கவிதைத் தொகுதியினை தமிழகத்தில் அச்சிட்டு வெளியிட்டவர். தாயகத்தில் அச்சிடப்பட்டு வெளிவரும் "வசந்தம் வரும் வாசல்" இவரது இரண்டாவது கவிதைத் தொகுதியாகும்.

புலத்தில் பல்வேறு பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இவர் எழுச்சிமிக்க விடுதலைப் போராட்டம் சார்ந்த கவிதைகளை உணர்ச்சிததும்ப எழுதி வந்திருக்கின்றார். இண்மையில் அலங்கையில் அச்சிடப்பட்டு வெளியாகும் "லண்டன் தமிழ் உலகம்" சஞ்சிகையின் டிசம்பர் 2004 இதழில் கூட இவரது கவிதை ஒன்று "குளத்திற்கு அவர்கள் மேல் கோபமில்லை" என்ற தலைப்பில் வெளியாகியிருக்கின்றது.

"வசந்தம் வரும் வாசல்" கவிதைத் தொகுதியும் முன்னர் புகலிடத்து இதழ்களை அலங்கரித்த இவரது உணர்ச்சிக் கவிதைகளின் தேர்ந்த சில படைப்புக்கள் தான். பெற்றோரை, உடன்பிறப்புக்களை இழந்த தாயகக் குழந்தைகளின் சோகங்கள், அவர்களது எதிர்காலம் பற்றிய ஏக்கங்கள், போரின் வடுக்களாக இன்று தாயகத்தில் காட்சிகளாக்கப்பட்ட ஊனமுற்றவர்கள், அதனால் சிதைவுற்ற அவர்களது இயல்பு வாழ்க்கைகள் என்பன இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள சில கவிதைகளின் கருவாகின்றன.

புலத்தின் அவசர வாழ்க்கையினாலும் புலம் பெயர்ந்தோரின் ஆடம்பர வாழ்க்கையினாலும் மூடிமறைக்கப்பட்டு மறக்கப்பட்டு வரும் எமது தாயகத்தின் சோகத்தைத் தன் எழுதுகோலால் கீறி அதை எம்மவர்கள் மீள நினைவுகூரவைக்கின்றார். "உதைபடுகையில் தமிழ் வந்தது" என்ற கவிதையில் புகலிடத்தின் தமிழரை விட்டுப் படிப்படியாக நீங்கும் தமிழ் உணர்வினை அங்கதச் சுவையுடன் சுட்டிக்காட்டவும் செய்கின்றார். இன்று தாயகத்திருந்து நீங்கிப் புலம்பெயர்ந்து வந்து பாதுகாப்பாகத் தம் வாழ்வியலை வகுத்துக் கொண்ட ஈழத்தமிழரின் சமூகக் கட்டமைப்புக்குள் தானும் நின்று கொண்டு அவர்களது வாழ்வியல் கோலங்களை மிகக் கூர்மையாக உள்வாங்கிக் கொண்டுள்ளதால் இவர் இத்தகைய கவிதைகளை அழுத்தமாகப் பரிவு செய்து வைக்க முடிந்துள்ளது.

"எண்ணைவள நாடு எரிந்து போகின்றது" என்று அமெரிக்காவின் போர்க்கோலத்தைச் சாடுவதன் மூலம் சர்வதேசக் கருக்களையும் தன் கவிதைகளில் கையாள முனைகிறார். இத்தகைய கவிதா புலங்கள் இவரை இதுவரை இருந்த கவிதாளத்திலிருந்து பிறிதொரு தளத்துக்கு எடுத்து சென்றுள்ளது. விரிந்த பார்வை கொண்ட புகழ்பூத்த உலகக் கவிஞர்களின் கவிதைகளின் விரிவான வாசிப்பு இவருக்கு எதிர்காலத்தில் மேலும் பரந்த தளத்தில் நின்று தனது கவிதைகளை உருவாக்க வழியமைக்கும் என்று கருதுகின்றேன். இதன் மூலம் இவரது கவிதா ஆளுமை மேலும் விரிந்து செல்ல வழியுண்டு என்று நம்புகின்றேன்.

இவர் தமது இரண்டாவது கவிதைத் தொகுப்புக்கு அங்கீகாரம் தேடி பழ. நெடுமாறன், ம.ஜெகத் கஸ்பார், கவிஞர் அறிவுமதி, கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோரை பழ நெடுமாறன் தனது வாழ்த்துரையில் இந்தியத் துணைக்கண்டத்தில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தின் போது மகாகவி பாரதி, கவிஞர் இக்பால், கவிஞர் இரவீந்திரநாத் தாகூர், போன்றவர்கள் அப்போராட்டத்தைப் பற்றிப் பாடி எழுச்சியை உருவாக்கினார்கள் என்றும், தமிழ் நாட்டில் பெரியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பாரதிதாசன் பாடித் தமிழர்களைத் தட்டியெழுப்பினார் என்றும் குறிப்பிட்டு அவ்வகையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றி எழுதப்படும் கவிதைகளும் கட்டுரைகளும் இதர ஆக்கங்களும் வரலாற்றுச் சுவடிகளாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார். அத்தகைய பதிவினை கவிஞர் மட்டுவில் ஞானகுமாரனும் சிறப்பாகச் செய்திருக்கின்றார் என்று பாராட்டி எழுதியிருக்கின்றார்.

இவரது கவிதைகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள வெரித்தாஸ் வானொலியின் முன்னாள் ஒலிபரப்பாளரும், தற்போது தமிழ் மையம் இயக்குநராக இருப்பவருமான அருட்திரு ம. ஜெகத் கஸ்பார், அவர்கள் தனது குறிப்பில் இன்றைய புதுக் கவிதைகள் பல அலுப்பையும் சலிப்பையுமே தருகின்றன என்று சாடியிருக்கின்றார். மிகைப்படுத்தல், மண்ணில் கால் பதிக்காத கற்பனைகள், சொல் இரைச்சல்கள், கை தட்டல் வாங்குவதற்கான ஜோடனை வடிவமைப்பு எனப் புதுக் கவிதையின் ஆரோக்கியம் பொதுவாகச் சரியில்லை என்று அருட்திரு கஸ்பார் அவர்கள் மேலும் குறிப்பிட்டு, விதிவிலக்காக, மட்டுவில் ஞான குமாரன் அவர்களின் பல கவிதைகள் தனித்துவம் கொண்வையாக மிளிர்கின்றன என்கிறார். அனுபவக் கனிதல், ஆத்மாவின் உருகல், விவரிப்பு, விசாரணை, விசாரம், கண்ணியச் சீற்றம், என இறவாத கவிதைகளுக்கு என்னென்ன இரசாயனங்கள் அவசியமோ, அவை யாவும் இவரது கவிதைகளில் இருக்கின்றன என்று சான்றிதழ் வழங்கியுள்ளார்.

ஜேர்மனியிலிருந்து வெளிவந்துள்ள பங்குச் சந்தை வெற்றி வாய்ப்புக்கள் என்ற மற்றொரு நூல் பற்றி இனிப் பார்ப்போம்.

ஜேர்மனியில் கிளீவ் என்ற இடத்தில் வசிக்கும், ஈழத்துத் தமிழறிஞரான கனகசபாபதி சரவணபவன் அவர்கள் எழுதி, ஜேர்மனியிலிருந்து, திருகோணமலை வெளியீட்டாளர்கள் என்ற பதிப்பகத்தின் வாயிலாக வெளியிடப்பட்டிருக்கும் இந்நூல் வெற்றிகரமாகப் பங்குச் சந்தையில் ஈடுபட விரும்புவோருக்கான பயனுள்ள அடிப்படை அறிவையும், அரிய ஆலோசனைகளை வழங்குகின்றது.

இந்நூலில் இருபது தலைப்புக்களின் கீழ் பங்குச் சந்தை முதலீடுகள் பற்றியும் அத்துறையில் ஆர்வமுள்ள ஒருவர் அறிந்திருக்க வேண்டிய அடிப்படை விதிகள் பற்றியும் தகவல்கள் தெளிவாகப் படிமுறையாக வழங்கப்பட்டுள்ளன. முதலீடு என்ற முதலாவது இயலின் பங்குச் சந்தை வெற்றியை அதிர்ஷ்டம் ஒருபோதும் தீர்மானிக்காது என்ற உண்மையை தெளிவுபடுத்துகின்றார். பொருளாதாரக் காரணிகளே அந்த வெற்றிவாய்ப்பை முழுமையாகத் தீர்மானிக்கின்றன என்று விளக்குகின்றார். EPS எனப்படும் ஒரு பங்கின் வருமானம், பங்கு விலை- தனிப் பங்கு வருமான விகிதம், கேள்வியும் நிரம்பலும், சந்தை, Short Sell, DOW விதிகள், இந்திய பங்குச் சந்தை சிறப்புப்பார்வை, பங்குச் சந்தையின் உளவியல் என்று பல்வேறு விடயங்கள் இந்நூலில் சிறப்பாகவும், வாசகருக்குச் சலிப்புத் தட்டாத வகையிலும் விளக்கப்பட்டுள்ளது. இந்த நூலை வாசிப்பவர்கள் அதிர்ஷ்ட தேவதை பற்றிய மாயையிலிருந்து தம்மை விலக்கிக் கொண்டு, ஆர்வத்துடன் பங்குச்சந்தை பற்றிய மேலதிகத் தகவல்கள் தொடர்பான தேடலில் ஈடுபட்டுத் தம்மையும் இத்துறையில் பிணைத்துக் கொள்வார்களெனில் அதுவே இந்நூலின் வெற்றியாகும்.



கண்டி கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் மாணவர் திறன் விருத்தி நிகழ்வு திரித்துவக் கல்லூரி மண்டபத்தில் 30-10-2004 ல் நடை பெற்ற பொழுது கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகள் பங்குபற்றிய கவிதா சமர், மாணவர்களின் நடன நிகழ்வு விழாவில் "கொழுந்து" ஆசிரியர் அந்தனி ஜீவா சிறப்புரையாற்றுகின்றார். படம் - "பாலா"

# நிகழ்வுகள் நினைவுகள் நிஜங்கள்

அந்தனி ஜீவா

### தேசிய நாடக விழா

கலாசார அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை கலைக்கழகத்தின் தேசிய நாடகக்குழு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற "தேசிய நாடக விழாவில் சிங்கள நாடகங்களுடன் மூன்று தமிழ் நாடகங்களும், ஓர் ஆங்கில நாடகமும் ஒரே மேடையில் மேடையேற்றம் கண்டது.

எனது திருந்திய அசோகன்" நூல் வெளியீட்டு விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட கலாசார அமைச்சர் கௌரவ விஜிய ஹேரத் அவர்களிடம் மேடையில் பகிரங்கமாக தமிழ்க்கலைஞர்கள் சார்பில் வடக்கு.

கிழக்கு, மலையகம், கொழும்பு என நான்கு நாடகங்களுக்கு வாய்ப்பு அளிக்கும் படி வேண்டுகோள் விடுத்தேன். அமைச்சரும் அதற்கு வாய்ப்பு வழங்குவதாக வாக்குறுதி அளித்தார்

பின்னர் தேசிய நாடகக்குழுவில் அங்கத்துவம் வகிக்கும் கலைஞர் கலைச்செல்வன், கலைவாதி கலீல், வ.அ. தங்கவேலாதம், நான் உட்பட குரல் கொடுத்த தன் காரணமாக தேசிய நாடக விழாவில் தமிழ் நாடகங்களை மேடையேற்ற ஒத்துக்கொண்டதுடன் - வடக்கில் இருந்து இரண்டு நாடகங்களும், கொழும்பில் இருந்து ஒரு நாடகமும் இடம் பெற்றது.

### நவாலியூரான் நா. செல்லத்துரைக்கு விருதும், ஐம்பதாயிரமும்



தேசிய நாடக விழாவில் கௌரவ பிரதமர் அவர்களால் சகோதர சிங்கள கலைஞர் சைமன் நவகத் தேகமுவ அவர்களுக்கு விருதும் பணப் பரிசாக ஐம்பதாயிரமும் வழங்கப்பட்டது. இதே போல தமிழ் நாடகத்துறைக்கு நீண்ட காலம்சேவை செய்த மூத்த கலைஞரான நவாலியூர் நா. செல்லத்துரைக்கு பிரதமர் கையால் விருதும் ஐம்பதாயிரமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதே போல மூத்த சிங்கள கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட கௌரவ விருதுகளில் ஒன்றினை மூத்த நாடக நடிகை மணிமேகலை இராமநாதனுக்கு பெற்றுக் கொடுத்தோம். அது மாத்திரமல்ல. தேசிய நாடகக்குழுவின் வேண்டுகோளுக்கு இணங்க உடல் நலம் குன்றியுள்ள கலாபூஷணம் நாடகக்கலைஞர் ஜே.பி. ஹொபர்ட் அவர்களுக்கு புரவலர் ஹாஸிம் உமர் அவர்கள் பத்தாயிரம் ரூபாயை அன்பளிப்பாக வழங்கினார்.

### மல்லிகை 40 ஆவது ஆண்டு மலர்

இன்று "மல்லிகை" என்ற பெயர், இலங்கை இலக்கியவாதிகளுக்கு மட்டுமன்றி, புலம் பெயர்ந்து வாழும், நம்மவர்களும், அயல் நாடுகளில் வாழும் தமிழர்களும் நன்கறிந்த பெயராகி விட்டது.

நாற்பது ஆண்டுகளாக ஒரு தனி மனிதர், ஓர் இலக்கிய சஞ்சிகை நடத்துவது என்பது மிக கடினமான செயற்பாடாகும் மல்லிகை நாற்பதாவது ஆண்டு மலரின் வெளியீட்டு விழா கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் அறிமுக உரையுடன் சிறப்பாக நடைபெற்றது முதல் பிரதியை இலக்கிய வாதிகளின் நம்பிக்கை நட்சத்திரமான புரவலர் ஹாசிம் உமர்" பெற்றுக்கொண்டார்.

மல்லிகை ஆசிரியரான டொமினிக் ஜீவா மல்லிகை சஞ்சிகையின் நாற்பது ஆண்டு கால வரலாற்றை உணர்வு பூர்வமாக எடுத்து கூறினார் "தனது உழைப்பு ஒன்றே இதன் மூலதனம்" என்றார். மல்லிகை சஞ்சிகையின் 40 ஆவது ஆண்டு மலரின் அச்சும் அமைப்பும் அதனோடு காத்திரமான ஆக்கங்களையும் கொண்டு சிறப்பாக வெளிவந்துள்ளது. படித்து பாதுகாக்க வேண்டிய மலர்.

### பேராசிரியர் சோ. சந்திரசேகரனின் மணி விழா



மலையகத்தின் மைந்தனான பேராசிரியர் சோ. சந்திர சேகரனின் மணிவிழா அண்மையில் கொழும்பில் மிக சிறப்பாக நடந்தேறியது. கல்வியாளர்கள் கலை இலக்கிய வாதிகள், வர்த்தகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மணிவிழாவின் பொழுது சிறப்பான மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. மணிவிழா மலரின் காத்திரமான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளது. பட்டத்தாரி மாணவர்களின் ஆய்வுகளுக்கு பயன் தரும் விசையில் தரவுகள் இடம் பெற்றுள்ளன.

பல்கலைக்கழக பேராசிரியர்களான பேராசான் கா.சிவத்தம்பி, அ. சண்முகதாஸ், சி. மௌனகுரு, அ. சிவராஜா செ. யோகராசா, மா. சின்னத்தம்பி விரிவுரையாளர்களான எ.எஸ். சந்திர போஸ், எம்.எஸ்.எம். .... எஸ். முரளிதரன், மனோன்மணி சண்முகதாஸ், வி.ரி. தமிழ் மாறன் என பலரும் காத்திரமான தலைப்புகளின் கட்டுரைகள் எழுதியுள்ளனர்

மணிவிழா நிகழ்வுகள் காற்றோடு கலந்து விடாமலிருக்க "மணிவிழா மலர்" காரணமாக அமைகிறது.

## அயலகத் தமிழ் இலக்கியம்



"இந்திய சாகித்திய அக்காதெமி" நிறுவனத்தின் வெளியீடாக எழுத்தாளர் சா. கந்தசாமி தொகுப்பாசிரியராக கொண்டு வெளிவந்துள்ள "அயலகத் தமிழ் இலக்கியம்" என்ற நூலில் இலங்கை மலேசியா சிங்கப்பூர் தமிழ்சிறு கதைகள், கவிதைகள் - இடம் பெற்றுள்ளன. இலங்கை தமிழ் எழுத்தாளர்களில்

16 சிறுகதைகள்'

மலேசியா சிறுகதைகள் 6

சிங்கப்பூர் சிறுகதைகள் 6 -

இலங்கை கவிதைகள் 16

மலேசியா கவிதைகள் 3

சிங்கப்பூர் கவிதை 2

எழுத்தாளர்களைப் பற்றிய குறிப்புகள் பின் குறிப்பாக உட்பட 328 பக்கங்களில் வெளிவந்துள்ளது (முதல் பதிப்பு - 2004 - என்ற குறிப்பும் காணப்படுகிறது.)

வாழ்த்துக்கள்!

தேவி ஜுவலர்ஸ்

38, D.S. சேனநாயக்கா வீதி,
கண்டி.

# மந்திரிகளுக்கு தெரியுமா மலையகத்தான் வேதனை?

மலையகத்தில் பிச்சைக்காரன் ஒருவன் கூட இல்லை. அகதிகளும் இல்லை. மக்கள் பசி, பட்டினியின்றி சகல விதமான உரிமைகளையும் சலுகைகளையும் பெற்று மாடி வீடுகளில் வாழ்கிறார்கள்.

மலையக மக்களின் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்து விட்டன.

இது செய்தி:-

இச்செய்தியானது வழிப்போக்கர்களின் வரட்டுத்தனமான வாய் வீச்சு அல்ல. மலையக மக்களின் தலைவர்கள் என்று கூறிக் கொள்ளும் நாடாளுமன்ற அமைச்சர், பிரதி அமைச்சர், பிரதி அமைச்சர் ஆகியோரின் கூற்றாகும்.

பாராளுமன்ற கூட்டத் தொடரில் பெருந்தோட்டத்துறை குழு நிலை விவாதத் தொடரில் தோட்ட உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சரும் பிரதி அமைச்சரும் கலந்து கொண்டு ஆற்றிய பொய்யுரைகளை கேட்டு மலையகம் கொதிக்கிறது.

அரசாங்கத்தின் நன்மதிப்பை பெறவும் தங்கள்து சுயநலத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளவும் மலையக சமூகத்திற்கு இவர்களால் ஏற்படுத்தப்பட்டது துரோக சாயல் படிந்த அவமானத்தை மூடிமறைக்கவும் உண்மைக்கு மாறான கருத்தை நாடாளுமன்றத்தில் கூறியிருப்பதன் மூலம் முழு சமூகத்தையும் தமிழ் இனத்தையும் உலகையும் ஏமாற்ற பூச்சாண்டி காட்டியுள்ளதோடு மலையக மக்களை இன்னும் மடையர்கள் என்று எண்ணி உளறியிருக்கிறார்கள்.

இந்த பேச்சில் மூலம் மலையக சமுதாயத்தை அழித்தொழிக்க முயலும் இனவெறி பிடித்த அரசியல் தன்னாதிக்க வெறியர்களுக்கும் அதிகாரத்தால் தமிழ் மக்களை ஆட்டிப்படைக்க முனையும் ஆளும் வர்க்கத்திற்கும் சாதகமாக பேசி உண்மைக்கு மாறான ஒரு தோற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் தங்களுடைய துரோகத்தினை மூடி மறைத்து விடலாம் என்ற நப்பாசையின் வெறித்தன்மையே இவர்களது பேச்சாகும்.

**உண்மை நிலை என்ன?**

மலையகத்தின் உண்மை நிலை என்ன? வறுமையின் கொடுமையில் சிக்கி வாடிவதங்கி பொறுமையின் எல்லைக் கோட்டில் நின்று எதிர்காலத்தை ஏக்கத்தோடு பார்த்து வாழும் மலையக மக்களா பஞ்சாமிர்தம் அருந்தி பாலும் தேனும் உண்டு வாழ்கிறார்கள்? ஒரு வேளை கஞ்சிக்காக உள்ளதை எல்லாம் இழக்கும் கேவலத்திற்கு உள்ளாக்கப்பட்டவர்களாக வசதியாக வாழ்கிறார்கள்?

உண்பதற்கு தக்க உணவில்லை, உயிர் வாழ சுகாதார வசதியில்லை, பள்ளிப்பிள்ளைகளுக்கு படித்து முன்னேற பொருளாதார வாய்ப்பில்லை நோய் நொடி பட்டு நொந்து போனவர்களுக்கு நிவாரணம் பெற வாய்ப்பில்லை.

இருக்கின்ற வீடு சொந்தமில்லை. மாடி வீட்டில் மகிழ்ச்சியின்றி மனமுடைந்து போனவர்கள் அவதிப்படுகிறார்கள். இல்லாமை பேய் அவர்களை விரட்டுகிறது. இயலாமைத் துன்பம் அவர்களை வலுவிழக்கச் செய்கிறது.

பள்ளிகள் அனைத்தும் பாரபட்ச நிலையில் நடக்கிறது. பல்கலைக்கழக படிப்பு கிட்டாது பாழ்பட்டு போகின்ற சீரழிவும் நீடிக்கிறது. குடியிருக்கும் வீட்டுக்கு உறுதி தந்து சொந்தமாக்கிவிட்டோம் என்று சொன்ன பொய் மக்களை ஏமாற்றவில்லையா?

சாலைகளின்றி, பாடசாலை சென்று வர வசதிகளின்றி கேவலப்பட்ட நிலையில் மலையக சிறார்கள் அவதிப்படுவதும் பெற்றோர்கள் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு உதவ முடியாமல் தவிப்பதும், துன்பப்படுவதும் தெரியவில்லையா?

**அவதிகள் கொஞ்சம்?**

மாகாண ரீதியாக மக்கள் படும் அவதிகள் கொஞ்சமா....தோட்டங்களில் நிலவும் அவலம் தெரியவில்லையா?

மாத்தளை, எல்கடுவ, கலஹா, கம்பளை தோட்டங்களில் மக்கள் படும் வேதனைகள் தெரியவில்லையா?

வீட்டுப்பிரச்சினை முற்றாக தீர்க்கப்பட்டு விட்டதா?

சிவேரா

மந்திரிகளே மனசாட்சியின்படி சொல்லுங்கள். தொழிலாளர்களுக்கு நீங்கள் செய்யும் துரோகத்திற்கு விலையென்ன?

நாக்கில் நரம்பின்றி மலையக மக்கள் நலமுடன் வாழ்கிறார்கள் என்று எந்த அடிப்படையில் சொல்கிறீர்கள். படித்த இளைஞர்கள் பல்கலைக்கழகம் செல்ல கிடைத்த உதவிப்பணங்களை இல்லாமலாக்கி, அவர்களை கைவிடவில்லையா? சத்தியக் கடதாசி இல்லாமல் ஒரு காரியமும் நடக்காத பிரஜாவுரிமை பித்தலாட்டம் மலையக மக்களுக்கு என்ன உதவி செய்துள்ளது.

சம்பளம் உயர்வில் மக்களிடம் மன்னிப்பு கேட்ட நீங்களா....மக்களின் வசதிகள் பற்றி பேசுகின்றீர்கள்?

உணவுப் பொருட்கள், உடுத்தும் உடை, அனைத்தும் விலையேறி வாழ்க்கைச் செலவினால் நொந்து போய் விட்ட மலையக மக்களா வயிறார உண்டு,

பல்வேறு துன்ப துயரங்கட்கும் முகங்கொடுத்து தேயிலை இறப்பர் தோட்டங்களில் அவதிப்படும் தாய்மார்கள் வயிறார உண்டா வாழ்கிறார்கள்? வயிற்றில் நெருப்பை கட்டிக் கொண்டு வறுமையின் கோரப்பிடியில் சிக்கி சீரழியும் சமூகம் எந்த நன்மையை கண்டுள்ளது?

இன்று மலையக இளைஞர்கள், படித்தவர்கள் அனைத்தையும் அவதானித்து வருகிறார்கள். தலைமைகள் செய்யும் நடவடிக்கைகளை, உண்மைகளை தெரிந்து கண்டனத்தை தெரிவித்து வருகிறார்கள்.

மலையக மக்களை கேவலப்படுத்தி கீழ் நிலைக்கு இழிவுபடுத்தும் எந்த செயலையும் மலையகம் கண்டிக்கும். தான்தோன்றித்தனமாக மக்களை ஏமாற்ற முனையும் தலைமைகள் அரசியலிலிருந்தும் சமூகத்திலிருந்தும் ஒதுக்கப்படுவார்கள்.

மலையக மக்களின் உண்மை நிலையை உணர்ந்து தீர்க்கதரிசனத்துடன் செயலாற்றுவது தான் இன்றைய தேவையாகும்.

நன்றி வீரகேசரி
12-02-2004

# சொன்னார்கள்

மலையகத்தில் பிச்சைக்காரன் ஒருவன் கூட இல்லை. அகதிகளும் இல்லை. மலையக மக்கள் தன் மானத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் மாடி மாளிகைகளினதும் சர்வதேச பாடசாலைகளிலும் கல்வி கற்று சிறந்த வாழ்க்கை வாழ்கிறார்கள்.


தேசிய வீடமைப்பு உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சருக்கான குழு நிலை விவாதத்தில்.

பிரதி அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி

தலை நகர் கொழும்பில் வசிக்கும் சிறுபான்மை மக்கள் தோட்டப்புற லயன்களை விட மோசமான வீடுகளிலேயே வசிக்கின்றனர்.

- வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பாராளுமன்ற உறுப்பினர் பெ. இராதா கிருஷ்ணன்

## அஞ்சலி




## நூரளை சண்முகநாதன்

மலையக இலக்கிய உலகில் நூரளை சண்டுகநாதன் என்றறியப்பட்ட நுவரெலியா மாவட்டத்தை சார்ந்த எஸ். சண்முகநாதன் 29-12-2004 அமரரானார். அமைதியாக எழுத்துப் பணியை மேற்கொண்ட நூரளை சண்முக நாதன் அமைதியாகவே நம்மை விட்டு பிரிந்து விட்டார் இவரது சிறுகதைகள் நூல் வடிவில் வெளிவராத காரணத்தால் இன்றைய இளைய தலை முறையினர்க்கு இவரை தெரியாது. எழுபதுகளில் நல்ல படைப்புகளை தந்தவர் இவரது "பெரிசாமி பீ.ஏ. ஆகிவிட்டான" என்ற சிறுகதை பெரிதும் பேசப்பட்டது. இவரது சிறுகதைகள் மலையக மக்களின் பிரச்சினைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது.

# கொழுந்து நூலகம்

### அச்சுக்கு வராத கவிதைகள்



புசல்லாவ கணபதி
மலையகத்தின் நம்பிகைக்குரிய கவிஞனின் படைப்பு
விலை 97.00
தொடர்புக்கு:

புசல்லாவை கே. கணபதி நிவ்பீக்கொக் தோட்டம்
சௌளி பிரிவு - புசல்லாவை

### உறவைத் தேடி

மண்டூர் அசோகா



யுத்த அனர்த்தங்களால் அழிவுகளுட் சிக்கி தவித்த ஈழத்தமிழர்களின் வாழ்வியலை எடுத்து காட்டும் கதைகள்
விலை : ரூ. 165/=

தொடர்புகளுக்கு: மீரா பதிப்பகம்
C 1/6, அண்டர்சன் தொடர்மாடி
பார்க்ரோட், கொழும்பு -05.

### தார்மீகக் கோபங்கள்

கோப்பாய் சிவம்

நவீன சிறுகதைகளின் போக்கினைக் கோப்பாய் சிவம் நன்கு புரிந்திருக்கிறார் என்பதற்கு அவரது கதைகள் தக்க எடுத்துக்காட்டுகள் என்கிறார் செங்கை ஆழியான்



விலை 150/=
தொடர்பு: இணுவில் கலை இலக்கிய வட்டம் கந்தசுவாமி கோவிலடி
இணுவில் - சுன்னாகம்.

### எண்ண ஊர்வலம்


ஜெ. மதிவதனி

கவியுலகு இன்று மற்றுமொரு கவிமகளை பெறுகிறது. "எண்ண ஊர்வலம்" மூலம் அனுபவ முதிர்ச்சி தொகுப்பாகிறது என் சிறர் கலாபூஷணம் தாபி. சுப்பிரமணியம்



விலை 100/=
தொடர்பு: ஈழத்து இலக்கியச் சோலை
21, ஔவையார் வீதி, திருக்கோணமலை.

### கல்வி கோட்பாடுகளும் இலக்கியக் கோட்பாடுகளும்



பேராசிரியர் கலாநிதி சபா. ஜெயராசா

கல்வித்துறையிலும், இலக்கியத்துறையிலும் மேற்கிளம்பிய கோட்பாடுகளை தமிழ்மொழியில் விளக்கும் நோக்குடன் இந்நூலாக்கம் மேற் கொள்ளப்பட்டுள்ளது என்கிறார் நூலாசிரியர்
விலை ரூபா 200/=
வெளியீடு: சன்சைன் கிரபிக்ஸ்
கே.கே.எஸ். வீதி - இணுவில்

### மகுடி



சிரித்திரன் சுந்தர்
பதில்கள்
தொகுப்பு: சுதாராஜ்
உதட்டையும் உள்ளத்தையும் திறக்க வைக்கும் தன்மை உடையவை மகுடி பதில்கள்
விலை: 140/=
தொடர்புகளுக்கு: தேனுகா பதிப்பகம்
58, அனுராதபுரம் வீதி புத்தளம்.



புரவலருடன் கிங்ஸ்லி செல்லையா

## நல்ல மனம் வேண்டும்!

எழுத்தாளர்களின் நூல் வெளியீட்டு விழாக்களில் புரவலம் ஹாசிம் உமர் வருகை தந்தால், நிச்சயம் அந்த எழுத்தாளர், அல்லது நூலை வெளியீடும் வெளியீட்டாளர் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள்.

நூல் வெளியீட்டு விழாவுக்கான செலவுகள் அனைத்தும் புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமர் முதல் பிரதி வாங்கும் போது வழங்கும் அன்பளிப்பில் அடங்கிவிடும் இதுவரை புரவலர் 400 நூல்களுக்கு அதிகமாக முதற் பிரதிகளை வாங்கியுள்ளார்.

அது மாத்திரமல்ல கலைஞர் பலருக்கு கைகொடுத்துள்ளார். கலைஞர் கிங்ஸ்லி செல்லையா தமது இறுதிக்காலத்தில் "யாரும் தன்னை வந்து பார்க்க வில்லை." என என்னிடம் வேதனையுடன் குறிப்பிட்டதை தினகரன் - வார மஞ்சரியில், நான் எழுதிய பொழுது - அதனை படித்து விட்டு, உடனே என்னுடன் தொடர்பு கொண்டு அவரின் முகவரியை தெரிந்து கொண்டு, கலைஞர் கிங்ஸ்லி செல்லையாவின் வீடு சென்று அவரின் உடனடி தேவைகளுக்காக ஒரு தொகை உதவி செய்தார்.

அண்மையில் தேசிய நாடக் குழுவின் சார்பில் கலைஞர் கலைச்செல்வன் தலை நகரில் தமிழ் நாடக மேடைக்கு பெரும் பங்களிப்பு செய்த நாடகக்கலைஞர் ஜெ.பி. றொபட் மிகவும் சுகயீனமாக இருக்கிறார் என்று தெரிவித்த பொழுது, உடனடியாக அவரில்லம் சென்று பத்தாயிரம் ரூபாய்க்கான காசோலையை புரவலர் கொடுத்தார்.

எல்லாரிடமும் தான் பொருள் இருக்கிறது ஆனால் கொடுப்பதற்கு மனம் வேண்டுமே" என்று புரவலர் இல்லாத ஒரு விழாவில் கம்பவாரிதி ஜெயராஜ் சொன்னதை சத்தியமான வார்த்தைகள் என்று நம்பலாம்.

NAGALINGAMS JEWELLERS
வாழ்த்துக்கள்
நாகலிங்கம்ஸ்
ஜுவலர்ஸ்
No. 101, Colombo Street, Kandy.
Tel: 081-2232545

## அலைகளுடன் போராடிய சிறுமி!



மீன் பிடிக்க கடல் வந்தது
போதுமென்றா நீ
மனிதரைப் பிடிக்க
நகர் வந்தாய்
ஞானியார்
(இணையத்திலிருந்து...)

(படத்திலிருக்கும் ஒன்பது வயது சிறுமி சில்வியா மட்டக்களப்பு கடலில் ஆறு மணித்தியாளம் உயிருக்கு போராடி படையினரால் மீட்கப்பட்டவர்.)

## இயந்திரப் பெண்

இன்னும் தேவைப்பட்டது
அவனுக்கு
அவள் உடம்பிலிருந்து
சில துளி இரத்தங்கள்

அவள்
சுதந்திரக் காற்றை
நசுக்கி
சுத்த உணர்வுகளை
நொறுக்க
இன்னும் தேவைப்பட்டது
சில துளி இரத்தங்கள்



பாதங்களுக்குக் கீழே
விரித்த
முட்கம்பளத்தில்
அவள் அவசியம்
பயணித்தே ஆக வேண்டும்
இது அவனால்
விதிக்கப்பட்ட
சட்டத்தின் ஒரு கோவை

என் செயல்
என் சொல்
அனைத்தும் தான்
உன் வாழ்க்கை

என் பசிக்கு போஷணையாய்
பார்வைக்கு சித்திரமாய்
மனைக்கு சேவகியாய்
என் சிசுக்களின் உற்பத்தி
சாலையாய்
என் கோபத்தை தணிப்பவளாய்
நீ மாற வேண்டும்

இன்னும்
தேவைப்பட்டது
சில துளி இரத்தங்கள்

பஞ்சணைக்குப் பத்தினியாய்
நீ இல்லாதபோது
தேடிப் போகும்
பாதங்கள்,
பத்தினிகளை விலைபேசும்

தலாட்டுக்கள்
பாடாத தொட்டில்கள்
உனக்கு கட்டிடுமே
மலடிப் பட்டம்
பிள்ளைப் பெறுவதற்காய்
தவமிருந்தும்
தொல்லை பல
வந்திடுமே எந்தப் பிள்ளை என

ஆயினும்
தேவைப்பட்டது
சில துளி இரத்தங்கள்
அவனுக்கு

சுதாஜினி
தலவாக்கலை

# கொழுந்து

இதழ் 18 ஜனவரி 2005

சகல தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
த.பெ. எண் 32
கண்டி

## தண்ணீரில் வாழ்ந்தவர்கள் கண்ணீரில்...

புதிய ஆண்டின் வரவுக்காக ஐந்தே ஐந்து நாட்கள் இருக்கும் பொழுது டிசம்பர் 26-ம் திகதி கடலின் கொந்தளிப்புக்கு நாட்டின் பல பகுதிகள் இரையாகியது.

இந்தோனேஷியா சுமித்ரா தீவுக்கு அருகில் தோன்றிய பூகம்பத்தினால் நம் தேசத்திற்கும் பாரிய நாசங்கள் ஏற்பட்டது.

வடக்கு கிழக்கு தென்னிலங்கை என கரையோரப் பிரதேசங்கள் பாரிய பாதிப்புக்குள்ளாகிய. இன மத மொழி வேறுபாடின்றி நாப்பதாயிரத்திற்கு மேற்பட்ட உயிர்களை பறிக்கொடுத்தோம். ஒரு லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் உடமைகளை இழந்து அகதிகளானார்கள்.

உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் உதவும் கரங்களால் ஓரளவு உதவினார்கள் ஆனால் இந்த கடலில் சீற்றத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் கடலையே நம்பி வாழ்ந்தவர்கள் இவர்களின் மீட்சியே மிக முக்கியமாகும்.

தண்ணீரில் வாழ்ந்தவர்கள் இன்று கண்ணீரில் வாழும் நிலை. அரசு இவர்கள் விடயத்தில் அக்கறை காட்ட வேண்டும். இவர்களின் எதிர்காலத்தை சுபீட்சமாக்குவது ஒவ்வொரு பிரஜையின கடமையாகும்.

இனி அடுத்த.... இதழில்
சந்திப்போம்.

கொழுந்து
தொடர்ந்து வெளிவர
வாழ்த்துக்கள்

Sasico Tex

No. 53/1A, 12 Lucky Paradise Super Markert,
Keyzer Street, Colombo -11
Tel: 2432850, 2471719 Mobile: 077 - 769037

கொழுந்து ஆசிரியர் அந்தனி ஜீவா அவர்களினால் வெள்ளவத்தை டெக்னோ பிரின்ட் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.